# ஆழ்வார்கள் சுட்டும் திருமாலிருஞ்சோலையின் அழகு

**முனைவர் ஜெ.காவேரி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் நிலை குறிஞ்சி நிலமாகிய மலையும் மலை சார்ந்த பகுதியையும் அடிப்படையாகக்கொண்டே தொடங்கியது. மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கிய இந்நிலமே, இயற்கைச் சூழலே மனிதனின் வழிபாட்டுக்கும் அடிப்படையாக அமைந்தது. நிலம், நீர், ஆறு, காற்று, ஆகாயம், நெருப்பு, மலை, மழை, மரம் என்ற அனைத்திலும் அன்றைய மனிதன் கடவுளைக் கண்டான். எனவே அவற்றைப் போற்றி வணங்கினான். இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தான். இவ்வியற்கையைக் கண்டு பக்தி உள்ளத்தோடு மகிழ்ந்தான். அதனுள் உள்ள ஒவ்வொரு அழகிலும் தன் மனதைப் பறிகொடுத்தான். அவ்வியற்கை அழகைக் கவினுற இலக்கியங்களில் பதிவு செய்தான். ஆழ்வார்களும் அழகின் வடிவமான திருமால் வீற்றிருக்கும் திருமாலிருஞ்சோலையினைப் பற்றிக் கூறும்போது, அதன் அழகில் தம் மனதைப் பறிகொடுத்து அவற்றின் அழகினைப் பாடல்களில் கவினுற வா்ணித்துள்ளனா்.

அழகின் வடிவமானவா் திருமால். அத்திருமால் வீற்றிருக்கும் மாலிருஞ்சோலையின் அழகினை முழுவதும் வா்ணிப்பது என்பது இயலாதது. அழகிய திருத்தலமாகவும், புண்ணியதலமாகவும் ஆழ்வார்களால் எண்ணப்படுவது இத்தலம். ஆழ்வார்கள் தங்களது பாடல்களில் இத்தலத்தின் அழகினைப் பல்வேறு வரிகளில், பல்வேறுவகைகளில் பதிவு செய்துள்ளனா்.

### சோதி மயமான மலை

மனிதா்களின் அறியாமை என்னும் பேரிருளை நீக்கி, மோட்சம் எனும் ஒளிவெள்ளத்திற்கு அழைத்துச் செல்லத் துணையிருப்பது இறைவனின் பாதமே. அத்தகைய ஒளிப்பிழம்பாகிய இறைவன் வீற்றிருக்கும் மலையும், மனிதனின் அகஇருளை நீக்கி அவனை மோட்சப்பாதைக்கு அழைத்துச் செல்வதை உணா்த்தும்வண்ணம் ஒளிப்பிழம்பாய், சோதிமயமாய் திகழும்.

சைவத்தில் எவ்வாறு திருவண்ணாமலையை மனிதா்களின் அறியாமையை நீக்கும் சோதிமயமான மலை என்று சுட்டுகின்றனரோ அதைப்போன்று வைணவா்கள் திருமாலிருஞ்சோலை மலையைச் சோதிமயமான மலை என்று போற்றுகின்றனா். நம்மாழ்வார் திருமாலிருஞ்சோலை மலையின் அழகினைப் பின்வரும் பாடல் வரிகளில் புலப்படுத்துகின்றாா்.

> **"கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்**
> **வளரொளி மாயோன் மருவிய கோயில்**
> **வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ் சோலை**
> **தளா்விலராகில் சாா்வது சதிரே" - (நா.தி.பி. - பா.எண்-2886)**

கிளர்ந்துவரும் ஞான ஒளியுடைய இளமைப் பருவம் போவதற்கு முன்னரே, குன்றாத ஒளியுடைய திருமால் வீற்றிருக்கும் திருமாலிருஞ்சோலை மலையை அடைவதே உங்கள் ஆத்மாவுக்கு பேறு என்கின்றார். சோதிமயமான திருமால் வீற்றிருக்கும் மலையும் சோதிமயமாயன்றோ இருக்கும்.

சந்திரன் எவ்வாறு புறஇருட்டை நீக்கி ஒளியைத் தருகின்றதோ, அதனைப்போன்றே திருமாலையும் வணங்கினால் அகஇருள் நீங்கி ஞான ஒளி விளங்கும் எனும் பொருள் அமைய,

**“மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலை**
**பதியது ஏத்தியெழுவது பயனே” - (நா.தி.பி. - பா.எண்-2887)**

என்று பாடுகின்றார். இவ்வாறு சந்திரன் தவழும் அழகான ஒளிமயமான மலை திருமாலிருஞ்சோலை மலை என்று புகழ்கின்றார். இத்தகைய சந்திரன் வீற்றிருக்கும் மலை என்பதை,

**“மலமறு மதிசேர் மாலிருஞ் சோலை**
**வலம்முறை எய்தி மருவுதல் வலமே” - (நா.தி.பி. - பா.எண்-2892)**

என்று மற்றொரு பாடலிலும் பதிவு செய்து, இத்தகைய ஒளி வீசும் மலையை முறையாய் வலம் வருதலே தகும் என்று விளக்குகின்றார்.

இயற்கையாய் எழுந்த ஒளி மட்டுமல்லாது இங்கு செயற்கையாய் எழும் ஒளியும் நிறைந்திருந்து, எங்கும் ஒளி மிகுந்து சோதிமயமயாய் அமையுமாம். திருமங்கையாழ்வார் இம்மலையின் எழிலினைப் பின்வரும் பாடல் வரிகளில் புலப்படுத்துகின்றார்.

**“கணிவளர் வேங்கை நெடு நிலமதனில்**
**குறவர் தம் கவணிடைத் துரந்த**
**மணிவளர் சாரல் மாலிருஞ்சோலை**
**வணங்குதும் வா மடநெஞ்சே!” - (நா.தி.பி. - பா.எண்-1820)**

திருமாலிருஞ்சோலை வீற்றிருக்கும் நிலமானது, பூப்பதைக்கொண்டு காலம் காட்டும் வேங்கை மரங்கள் நிறைந்துள்ள பகுதியாகும். இம்மலையில் வாழும் குறவர்கள் தங்கள் கவண் கயிற்றினால் ரத்தினங்களை எறிவர். அதனால் உண்டான ஒளி எங்கும் சிதறும் சிறப்புடைய திருமாலிருஞ்சோலை என்று குறிப்பிடப்படுகின்றது. அழகராம் திருமால் வீற்றிருக்கும் திருமாலிருஞ்சோலை மலையானது இயற்கையொளியும், செயற்கையொளியும் சேர்ந்து மனிதனின் அகஇருளை விரட்டும் சோதிமயமாய் விளங்குகின்றது.

**சோலைகள் சூழ்ந்த மலை**

மரங்களே மனிதனின் உயிருக்கு ஆதாரமாகவும், மண்ணிற்கு ஆதாரமாகவும் விளங்குகின்றது. அத்தகைய மரங்களைப் பண்டைத் தமிழர்கள் போற்றி வணங்கி பாதுகாத்துள்ளனர். கடவுளைப் போற்றும்போதும் மரங்களைப் போற்றியே புகழ்கின்றனர். இயற்கையோடு இரண்டற வாழ்ந்துள்ளனர். மரங்களில்லா மலை என்பது புன்னகை இல்லா மனிதனைப் போன்று வெறுமையைத் தருவது. அதனை இரசிப்பவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். திருமாலிருஞ்சோலையும் பெயரிலேயே ‘சோலை’யைக்கொண்டு திகழ்வதால் பல்விதமான மரங்களைக்கொண்ட அழகிய பூஞ்சோலையாய் திகழ்கின்றது. திருமாலிருஞ்சோலை மலை இவ்வாறு கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தளிப்பதாய், காண்போரைச் சுண்டியிழுப்பதாய் அமைந்துள்ளது. ‘உடைகளைக் கழற்றிவிட்டு காற்றில் நிற்பது போல், எண்ணங்களைக் கழற்றி மனதில் உள்ள தீய அழுக்குகளை நீக்கிவிட்டு இம்மலை மேல் மனங்களைத் தரிசித்தால், மனதில் உள்ள அழுக்குகள் நீங்கி மனம் நிர்மலமாகிவிடும். இத்தகைய மரங்கள் சூழ் மாலிருஞ்சோலை, நம் மனதைப் பறிக்கின்றதைப் போன்று, இயற்கையோடு இரண்டற வாழ்ந்த ஆழ்வார்களின் மனதினையும் பறிக்காமல் இல்லை. திருமாலைப் புகழ்கின்ற இடத்தில் எல்லாம், திருமாலோடு, அவர் வீற்றிருக்கும் மலையான திருமாலிருஞ்சோலையினையும் சேர்த்தே புகழ்கின்றனர். மலையைப் புகழ்கின்றவிடத்து, அதிலுள்ள மரங்களை எண்ணி வியக்கின்றனர். பூஞ்சோலைகள் நிறைந்தது திருமாலிருஞ்சோலை என்று ஆழ்வார்கள் குறிப்பிடுகின்றனர்.

**“துங்கமலர்ப் பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை” - (நா.தி.பி. - பா.எண்-591)**

**“பாண்தகு வண்டினங்கள் பண்கள் பாடி மதுப்பருகத்**
**தோண்டல் உடைய மலை தொல்லை மாலிருஞ்சோலை” - (நா.தி.பி. - பா.எண்-354)**

**“மருதம் பொழிலணி மாலிருஞ்சோலை” நா.தி.பி. - பா.எண்-348)**
**“வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ்சோலை” - (நா.தி.பி. - பா.எண்-1832)**
**“தேனமர் பூம்பொழில் சூழ் திருமாலிருஞ்சோலை” - (நா.தி.பி. - பா.எண்-2229)**

என்ற ஆழ்வார்களின் பாடல் வரிகளிலிருந்து திருமாலிருஞ்சோலை மலையானது அழகான மலர்கள் நிறைந்த சோலைகள் நிறைந்த மலை என்ற செய்தி பெறப்படுகின்றது.

சங்க இலக்கியங்களிலேயே வேங்கை, கோங்கு என்பது குறிஞ்சி நிலத்திற்குரிய மரங்களாகச் சுட்டப்படுகின்றன. இவை மட்டுமின்றி இன்னும் நிறைய மரங்கள் திருமாலிருஞ்சோலை மலையில் காணப்படுகின்றன. திருமாலிருஞ்சோலையில் காணப்படும் மரங்களாக ஆழ்வார்கள் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

**“கோங்கு அலரும் பொழில் மாலிருஞ்சோலையில்**
**கொன்றைகள் மேல்**
**தூங்கு பொன்மாலையோடு” - (நா.தி.பி. - பா.எண்-595)**

**“பொருப்பிடைக் கொன்றை நின்று முறி ஆழியும் காசும் கொண்டு**
**விருப்பொடு பொன் வழங்கும் வியன் மாலிருஞ்சோலையதே” - (நா.தி.பி.-பா.எண்-349)**

**“தட்டலர்த்த பொன்னேயலர் கோங்கின்**
**தாழ் பொழில் திருமாலிருஞ்சோலை” - (நா.தி.பி. - பா.எண்-1273)**

என்ற பாடல் வரிகளில் திருமாலிருஞ்சோலையில் நிறைந்திருக்கும் கொன்றை மலர் மற்றும் கோங்கு மரத்தின் அழகினை ஆழ்வார்கள் குறிப்பிடுகின்றனர். அவை பொன் நிறத்தில் காணப்பட்டு, தங்கக் காசுகள் சிந்தியிருப்பதனைப் போன்று அவற்றின் பூக்கள் இருப்பதனைக் குறிப்பிடுகின்றார்.

திருமாலிருஞ்சோலையில் காணப்படும் நூபுரகங்கையின் நீரானது அம்மலையில் காணப்படும் சந்தனம், கார், அகில் போன்ற மரங்களினை அடித்துக்கொண்டு செல்லும் தன்மையுடையது என்று ஆண்டாள் சுட்டுவதனைப் பின்வரும் பாடல் வரிகள் விளக்குகின்றது.

**“சந்தொடு கார்அகில் சுமந்து தடங்கள் பொருது**
**வந்திழியும் சிலம்பாறுடை மாலிருஞ்சோலை” - (நா.தி.பி. - பா.எண்-596)**

புன்னை, செருந்தி, கோங்கு போன்ற பல்வித மரங்கள் நிறைந்திருக்கும் மலை திருமாலிருஞ்சோலை மலை. இத்தகைய புன்னை, செருந்தி, வேங்கை, கோங்கு போன்ற மரங்கள் வரிசையாக இருந்து அழகாகப் பூப்பதனால், பொன் மாலைகளால் சூழப்பட்டு அம்மலை அழகே உருவாய் திகழ்கின்றது(72) என்ற ஆழ்வார் குறிப்பிடுகின்றார்.

திருமாலிருஞ்சோலையில் மூங்கில்கள் ஓங்கி உயர்ந்தும் பின்னியும் காணப்படுகின்றதாம். ஓங்கியுயர்ந்த நுனிகள் மலை உச்சியிலுள்ள தேன் கூட்டினைக் கிழிக்கின்றதாம். அதனால் அதிலுள்ள தேனீக்கள் சிதற, தேனின் மணம் எங்கும் கமழும் மலை (99) என்று ஆழ்வார் ஒருவர் மூங்கில்கள் நிறைந்த மலை மாலிருஞ்சோலை மலை என்கின்றார். இதனைப் போன்றே பிற ஆழ்வார்களும்,

**“வேயிருஞ்சோலை சூழ்ந்து விரிகதிர் இரியநின்ற**
**மாலிருஞ்சோலை மேய மைந்தனை வணங்கினனே” - (நா.தி.பி. - பா.எண்-2034)**

**“வேயிருஞ் சாரல் வியலிரு ஞாலம்சூழ்**
**மாயிருஞ் சோலை மலை” - (நா.தி.பி. - பா.எண்-2229)**

என்று மூங்கில்கள் நிறைந்த மலை மாலிருஞ்சோலை மலை என்கின்றனர்.

மரங்கள் மட்டுமல்ல திருமாலிருஞ்சோலை மலையில் மலர்களும் பல வண்ணங்களிலும் பூத்து மகிழ்கின்றனவாம். திருமாலைக் காணும் ஆசையால் அவை நீக்கமற நிறைந்து மலர்ந்துள்ளன.

**“போர்க்களிறு பொரும் மாலிருஞ்சோலை அம்பூம்புறவில்**
**தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற**
**கார்க்கொள் படாக்கள் நின்று கழறிச் சிரிக்கத் தரியேன்” (நா.தி.பி. - பா.எண்-588)**

என்று ஆண்டாள் திருமாலிருஞ்சோலை மலையில் கொடிமுல்லையும் படாக்களும் திருமாலைக் காணும் ஆசையில் மலர்ந்து சிரிக்கின்றன என்கின்றார். இவ்வாறு திருமாலிருஞ்சோலை மலையானது வண்ண வண்ணப் பூக்களும், மரங்களும் மலர்ந்து, வளர்ந்து நிறைந்து இயற்கையெழில் ஓவியமாய்க் காட்சி தருகின்றது.

**இனிய சுனையும் அழகிய அருவியும் உடைய மலை**

திருமாலிருஞ்சோலை மலையானது பக்தர்களின் பக்தி வேட்கையையும், முக்தி வேட்கையையும் தீர்ப்பதோடு அல்லாது அவர்களது தாக வேட்கையையும் தீர்க்கும் சிறப்புவாய்ந்தது. மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது நீர். இதனையே வள்ளுவரும், ‘நீரின்று அமையாது உலகம்’ எனச் சுட்டியுள்ளார். இத்தகைய மனித வாழ்விற்கு ஆதராமான நீர்வளம் நிறைந்த மலையாக மாலிருஞ்சோலை காணப்படுகின்றது.

நீர் இருக்கும் இடம் எல்லாம் நீக்கமற இறைவனைக் கண்டனர் நம் முன்னோர். திருமால் திரிவிக்ரம அவதாரம் எடுத்து அனைத்து உலகங்களையும் அளந்தபொழுது, திருமாலின் திருவடி பிரம்ம லோகத்திற்கு செல்ல, பல்லாண்டுகளாக திருமாலின் பாதத்தைக் கண்டு வணங்கிட வேண்டி தவம் செய்த பிரம்மன் தன் அருகில் ஸ்வரணா கலசத்தில் இருந்த கங்கை நீரால் அபிசேகம் செய்தார். அப்போது திருமாலின் பாதத்தில் உள்ள சிலம்பு என்னும் நூபுரத்தில் கங்கை தீர்த்தம் பட்டு பிரம்மலோகத்தில் இருந்து பூவுலகத்திற்கு வந்துசேர்ந்து நூபுர கங்கை என்னும் பெயரில் வற்றாத புண்ணியநதியாக விளங்குகின்றது.

**“செந்தாமரை மலரில் சிந்திய தேன்போல**
**மந்தாகினி வழியும் வன்மையான்” - (அழகர் கிள்ளை விடு தூது-88)**

என்று இதனை அழகர் கிள்ளை விடு தூது குறிப்பிடுகின்றது.

அத்தகைய நூபுர கங்கையாறு சிலம்பாறு என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. அது மலையில் அருவிநீராய் இறங்கி காட்டாற்று நீராய் பாய்கின்றது. பலவித சுனைகள் நிறைந்த பகுதியாகயும் இத்திருமாலிருங்சோலை திகழ்கின்றது. இங்கு வளமான சுனைகள் நிறைந்திருந்து மலைக்கு வளம் சேர்ப்பதாய் திகழ்கின்றது. இச்சுனைகள் தன் மலையினை வளப்படுத்துவதோடு அல்லாது, தன் பக்கத்து மலையினையும் வளப்படுத்துவதாகவும் திகழ்கின்றது. இதனை நம்மாழ்வார்,

**“மறுவில் வண் சுனைசூழ் மாலிருஞ்சோலை**
**புறமலைசாரப்போவது கிரியே” - (நா.தி.பி. - பா.எண்-2890)**

என்ற தனது பாடலடிகளில் சுட்டுகின்றார். திருமாலை எண்ணினாலே நமது பாவங்கள் எல்லாம் பறந்து போகும் என்பது போல, திருமால் வீற்றிருக்கும் சுனை நீரினால் பக்கத்து மலைக்கும் வளம்கிடைக்கின்றது போலும்.

அத்தகைய சுனைகள் முழுவதும் செந்தாமரை மலர்கள் திருமாலின் கண்ணினைப் போன்று மலர்ந்து சுனைக்கு அழகூட்டுகின்றது.(51) மச்ச அவதாரமான திருமால் வீற்றிருக்கும் மலையில் உள்ள சுனை நீரில் அவரது அம்சமான மீன்கள் துள்ளி விளையாடுகின்றனவாம்(85). அச்சுனைகள் மக்கள் குடைந்து நீராடும்வண்ணம் நன்கு ஆழமானதாகக் காணப்படுகின்றனவாம் (நா.தி.பி. - பா. எண்-462)

இறைவன் வீற்றிருக்கும் இடத்திலுள்ள நீரில் நீராடினால் பாவம் போய் விடும் என்பது நம் மக்களின் நம்பிக்கை. திருமாலிருஞ்சோலை மலையிலுள்ள அருவியில் நாள்தோறும் மக்கள் நீராடிவிட்டு செல்வதனை,

**“கனங்கொழி தெள்ளருவி வந்து சூழ்ந்ததால் ஞாலமெல்லாம்**
**இனங்குழு வாடும் மலை எழில் மாலிருஞ்சோலையதே” - (நா.தி.பி. - பா.எண்-355)**

என்று உலகின் பலவிடங்களில் இருந்தம் வந்து மக்கள் தம் பாவம் தீர நீராடிவிட்டு செல்கின்றனர் என்கின்றார் ஆழ்வார். அத்தகைய சிறப்பு வாய்ந்த புண்ணிய அருவி திருமாலிருஞ்சோலை மலையில் காணப்படுகின்றது. இன்றும் இவ்வருவி நீரில் குளித்து மக்கள் தங்கள் பாவங்களைப் போக்கிச் செல்கின்றனர்.

இவ்வருவி நீர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் காலத்து அம்மலையிலுள்ள பல்வகை இயற்கைச் செல்வங்களையும் இழுத்துக்கொண்டு இறைவனின் பாதத்திற்குக் காணிக்கையாக்குவதற்குச் செல்கின்றதாம் (நா.தி.பி. - பா.எண்-357).

**"சந்தொடு மணியும் அண்மயில் தழையும்**
**தழுவி வந்து அருவிகள் நிரந்து**
**வந்திழி சாரல் மாலிருஞ்சோலை….." - (நா.தி.பி. - பா.எண்-1818)**

என்று திருமங்கையாழ்வார் அவ்வருவி நீர் இழுத்துவரும் பல்வகைப் பொருட்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இயற்கைப் பொருட்களுக்குக்கூட திருமாலின் அழகினைக் காண்பதற்கும், அவரது அன்பிற்குப் பாத்திரமாவதற்கும் உள்ள ஈடுபாடு இதில் தெரிகின்றது.

**"கள்ளச்சகடு உதைத்த கருமாணிக்க மாமலையை**
**தெள்ளருவி கொழிக்கும் திருமாலிருஞ்சோலைமலை" - (நா.தி.பி. - பா.எண்-1834)**

என்று அம்மலையின் தோற்றம் குறித்து திருமங்கையாழ்வார் குறிப்பிடுகின்றார். திருமாலிருஞ்சோலை மலையானது கரிய நிறத்திலும், அதில் அருவி நீரானது, ஒளிய வெண்மை நிறத்திலும் காணப்படுகின்றது. திருமாலிருஞ்சோலை மலையில் திருமால் கோயிலும், அவன் அண்ணன் பலராமன் கோயிலும் இருந்துள்ளது என்று பண்டைய இலக்கியங்கள் சுட்டுகின்றன. ஆழ்வாரும் மலை மற்றும் அருவி நீரின் தோற்றத்தினைச் சுட்டுமிடத்து திருமால் மற்றும் அவனது அண்ணன் பலராமனது மேனி நிறத்தினைச் சுட்டியுள்ளது நோக்கத்தக்கது.

இவ்வாறு திருமால் வீற்றிருக்கும் திருமாலிருஞ்சோலையில் உள்ள அருவி மற்றும் சுனை நீரின் அழகினையும் சிறப்பினையும் ஆழ்வார்கள் தங்கள் பாடல்களில் பாடியுள்ளனர். சுனை என்பது இயற்கை நீர் நிலைகளுள் ஒன்று. இது பொதுவாக மலைகளில் காணப்படும் நீர்நிலை வகையாகும். மலையில் தோன்றும் ஊற்று நீர் ஆகும். அருவி போன்றும் காணப்படும், குளம் போன்று தேங்கியும் இருக்கும். இச்சுனைகள் மலையில் வாழும் விலங்கினங்களுக்கு நீராதாரமாக இருக்கும். இச்சுனைகள் குறித்து பல இலக்கியங்களில் செய்திகள் காணப்படுகின்றன. நிலத்தின் வளமை, செழிப்பு முதலியவற்றைச்சுட்ட இவை பெரும்பாலும் சுட்டப்படுகின்றன. இத்தகைய பல சுனைகள் நிறைந்த பகுதியாக திருமாலிருஞ்சோலை காணப்படுகின்றது. இதனை,

**"இன்தீம் பைஞ்சுனை"**
**"தீம்பெரும் சுனை"**

என்று இலக்கியங்கள் அதன் தன்மை குறித்து பேசுகின்றன.

இத்தகைய சுனைகள் வளமிக்கதாய் இருக்கும் என்பதனை ஆழ்வார்கள்,

**"மறுவில்வண் சுனைசூழ் மாலிருஞ்சோலை" (நா.தி.பி. - பா.எண்-2890)**
**"சேல்உகளா நிற்கும்நீர் சுனைசூழ் திருமாலிருஞ்சோலை" - (நா.தி.பி. - பா.எண்-457)**
**"சென்றுலகம் குடைந்தாடும் சுனைத் திருமாலிருஞ்சோலை" - (நா.தி.பி. - பா.எண்-462)**

என்று சுட்டுகின்றனர்.

இத்தகைய ஆறுகளும் சுனைகளும் ஆயிரமாயிரம் நிறைந்து நெருங்கி மாலிருஞ்சோலையில் அமைந்து அம்மலைப்பகுதிகளை வளப்படுத்துகின்றன. இவ்வாறு மாலிருஞ்சோலை நீர் வளமிக்கதாய் அமைந்து, அழகிய பூக்களும், கனிகளும் நிறைந்த சோலைகளைக் கொண்டு அமைந்து, அம்மலையின் ஓங்கியுயர்ந்த தன்மையைச் சுட்டுமிடத்து,

**"மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட**
**மாலிருஞ்சோலை" - (நா.தி.பி. - பா.எண்-1574)**
**"திங்கள் நான்மாமுகில் சேர் திருமாலிருஞ்சோலை" - (நா.தி.பி. - பா.எண்-1831)**

என்று ஆழ்வார்கள் புகழ்கின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த மாலிருஞ்சோலை மலை அடியார்களின் அறியாமையை நீக்கும்வண்ணம் சோதிமயமாய் அமைந்து மோட்ச உலகினுக்கு அழைத்துச் செல்வதாய் திகழ்கின்றது.